SC.No. 27/2019

Date: 14.11.2024

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் ( பக்கம் )

சாட்சியாகிய திரு. ஆனந்தகுமார் என்ற Pw16 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்

செய்யப்படுகிறது.

பெயர் - திரு. ஆனந்தகுமார்

S/o, - திரு. செல்வமணி

வயது - 37

தொழில் - உதவி ஆய்வாளர்

முதல் விசாரணை:

நான் தற்போது பூந்தமல்லி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் கடந்த 29 3 2017 ஆம் தேதி நான் மாங்காடு காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது நதியா கணவர் பெயர் அன்பழகன் என்பவர் இரவு 10 மணிக்கு நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று மாங்காடு காவல் நிலைய குற்ற எண் 674 /2017 மேன் மிஸ்ஸிங் ஆக வழக்கு பதிவு செய்து மேல்விசாரணைக்காக ஆய்வாளர் அவர்களின் பார்வைக்காக வைத்தேன்.புகார் மனு அ.சா.ஆ.14 . அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.15.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை.

இவ்வழக்கு தொடர்பாக எத்தனை புகார்கள் பெற்றுள்ளேன் என்றால் ஒரு புகார் மட்டும் பெற்றுள்ளேன். புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட அச்சு முதல தகவல் அறிக்கையை எப்போது நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றால் பதிவு செய்த அன்றே அனுப்பிவிட்டேன். 29.3.2017 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டது அச்சு முதல் தகவல் அறிக்கை 12.4.2017 அன்று நீதித்துறை நடுவர் அவர்களால் பெறப்பட்டது என்றால் சரிதான் நான் அன்றைய தினமே அனுப்பிவிட்டேன். இவ்வழக்கில் நான் இரண்டு புகார் மனுக்களை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியாது. அச்சு முதல் தகவல் அறிக்கை பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.